Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 94/2020 PW-2**

Name : சுரேஷ்
Father / Husband name : ஏகாம்பரம்
Village : திண்டிவனம்
Age : 46
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.01.2026

A1 to A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் பெயிண்டர் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது நண்பர். சாட்சிகள் ஆதிமூலம், அன்வர் ஆகியோர்களை எனக்கு தெரியாது. சாட்சி ராமதுரை எனக்கு தெரியும். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 5 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் அ.சா.1 எழில் திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருப்பதாக முனுசாமி என்னிடம் போனில் சொன்னார். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அ.சா.1 க்கு மூக்கில் அடிப்பட்டு இரத்தக்காயம் இருந்தது. மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் செல்வதாக சொன்னார்கள். எப்படி அடிப்பட்டது என்று கேட்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 15.05.2017 அன்று எழில் என்பவரை எதிரி மஸ்தான் அசிங்கமாகபேசி கருங்கல்லால் மூக்கில் அடித்து காயத்ததை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார் என்று அதனை அன்வர் மறித்தபோது அவரையும் அடித்துவிட்டார் என்று எழில் உங்களுக்கும் ராமதுரைக்கு தகவல் சொல்லி நீங்கள்

சம்பவயிடம் சென்று அடிப்பட்ட எழிலை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கும் சிகிச்சைக்காக அழைத்துச்சென்றோம் என்றும், எழில் திண்டிவனம் அரசு மருத்துமவனையில் புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 94/2020        PW-3**

Name : ராமதுரை
Father / Husband name : அரிகிருஷ்ணன்
Village : திண்டிவனம்
Age : 48
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.01.2026

A1 to A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது வீட்டின் அருகில் இருப்பவர். சாட்சிகள் ஆதிமூலம், அன்வர் ஆகியோர்களை எனக்கு தெரியாது. அ.சா.2 சுரேஷ் என்பவரை எனக்கு தெரியும். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. சில வருடத்திற்கு முன்னர் ஒருநாள் எனது வீட்டின் அருகில் அ.சா.1 எழில் என்பவருக்கு அடிப்பட்டு திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருப்பதாக சொன்னார். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அ.சா.1 க்கு அடிப்பட்டு இருந்தது. எப்படி அடிப்பட்டது என்று கேட்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 15.05.2017 அன்று எழில் என்பவரை எதிரி மஸ்தான் அசிங்கமாகபேசி கருங்கல்லால் மூக்கில் அடித்து காயத்ததை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார் என்று அதனை அன்வர் மறித்தபோது அவரையும் அடித்துவிட்டார் என்று எழில் உங்களுக்கும் சுரேஷ் என்பவருக்கு தகவல் சொல்லி

நீங்கள் சம்பவயிடம் சென்று அடிப்பட்ட எழிலை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கும் சிகிச்சைக்காக அழைத்துச்சென்றோம் என்றும், எழில் திண்டிவனம் அரசு மருத்துமவனையில் புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.